Registered No. M-4433. Madras War Review (TAMIL) 18-8-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் ஆகஸ்ட்டு 18, வெள்ளிக்கிழமை இதழ் 50

ஜெனரல் மண்ட்காமரி

அடுத்தாற்போல் பூரண வெற்றி

நாம் ஒரு மகத்தான சேகரம். அமெரிக்கர்கள், பிரிட்டிஷார், கனடியர்கள், போராடும் பிரஞ்சுப் படையினர், போலந்துக்காரர்கள், இவர்கள் அனைவரும் ஒன்ருக இணைந்து நின்று ஒரு திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு போராடிக் கொண்டிருக்கிறோம்.

இன்று எல்லாம் நன்மையாகவே யிருக்கிறது. நமது படையினர் வன்னெஞசத்துடன் பிரான்சுக்குள் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிருர்கள்.

ஆகஸ்டு மாதத்தில் உஷ்ணம் அதிகம். போர் முனையில் தூசியும் வெகு அதிகம். ஆகவே, மேலும் மேலும் தாக்கிக் கொண்டு போவது எளிதன்று. ஆனல் இது மகா நெருக்கடியான காலம். அடுத்தாற் போல் பூரண வெற்றி நமக்குக் கிடைக்கப் போகிறது. நாம் இரக்கங் காட்டாதிருக்கும் போது அந்த வெற்றி வெகு விரைவில் கிடைக்கப் போகிறது.

ஆகவே, நாம் மிகுந்த புத்துணர்ச்சியும் ஊக்கமும் கொண்டு தொடர்ந்து போராடுவோமாக!

—ஜெனரல் மண்ட்காமரி, தன் படைகளுக்கு ஆகஸ்டு மாதம் 11-ம் தேதி விடுத்த செய்தியில் குறிப்பிட்டது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
அடுத்தாற்போல் பூரண வெற்றி	1	சென்னை சாப்பர்களின் சிறப்பு	5
முரசொலி	2	விசேஷ சம்பவங்கள் !	7
வானொலி நாட் குறிப்புக்கள்	2	ஜப்பானில் பங்கீடு முறை	9
தலையங்கம் : போர் முனை சகோதரத்துவம் ..	3	யுத்த நாட் குறிப்புக்கள்	12
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4		

முரசொலி

"எல்லா யுத்தங்களிலும் போராட்டங்களிலும் சண்டைகளிலும் முடிவு கட்டக் கூடியது, எதிர்க்கும் படைகளின் மனோ பலந்தான். மேலான தளவாடங்கள், மேலான உணவு, அதிக எண்ணிக்கை ஆகிய வற்றால் மனோ பலம் பெருகக் கூடும். ஆனால் கடைசியில் வெற்றி தர வல்லது, வெல்ல வேண்டு மென்னும் மனோ உறுதி தான். சிறகின் அழகைக் கொண்டு பறவையின் அழகை நிர்ணயிக்கலாம். ஆனால் கப்பலின் அழகைக் கொண்டு அதிலுள்ள மாலுமிகளின் திறமையை நிர்ணயிக்க முடியாது. அப்படி யிருந்தால் மத்தியதரைக் கடலில் மகத்தான இத்தாலியக் கப்பல் படையை நாம் வென்றிருக்க முடியாது. படையினரையும் அவர்களுடைய மனோ நிலையையும் எப்போதும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நிலைமை மோசமாக இருப்பதாக உங்களுக்குத் தோன்றினால், அதற்கு மிகச் சிறந்த 'டானிக்', எதிரிக்குள்ள கஷ்டங்களைக் குறித்து நீங்கள் சிந்திப்பது தான். எதிரிக்கும் கஷ்டங்கள் உண்டு என்று நீங்கள் உறுதியாக நம்பலாம். அவை உங்கள் கஷ்டத்தையும் விடக் கடுமையானவையா யிருக்கலாம். எப்படி யிருந்தாலும் உங்களை விட அவர்கள் அதிகக் கஷ்டப்படுவதாக நினைத்துப் பழகிக் கொள்ள வேண்டும். பலரைக் கொண்ட படையைத் துணைக் கொண்டிருப்பதை விட, கடைசியில் ஒரு சிறிது வெற்றியில் நம்பிக்கைக் கொண்டிருப்பது மேல்.

—வேவல் பிரபு, வைசிராயாக வரு முன்பு "சன்டே டைம்ஸ்"
பத்திரிகையில் எழுதியது.

* * * * *

"ப்ளாரென்சை நோக்கிப் போய் தொடுத்த போராட்டத்தில், 8-வது இந்திய டிவிஷன் மேற்கொண்ட வேலைபற்றி நான் அப்படையினரைப் பெரிதும் பாராட்டுகிறேன். இப்படையினர் நமது இடதுபுரமிருந்து கடுமையாகப் போரிட்டதன் பயனாகத் தான் இங்கே நமக்கு வெற்றி கிடைத்த தென்று கூறலாம்."

—லெப்டினன்ட் ஜெனரல் சர் ஆலிவர் லீசே, இத்தாலியிலுள்ள
8-ம் படைத் தலைவர், கூறியது.

வானொலி நாட் குறிப்புக்கள்.

22—8—44	திருச்சி	மாலை	7-15—"நாமும் யுத்தமும்"—மிஸ்டர் ஆர். சீனிவாசன்.
22—8—44	சென்னை	ஷ	7—"யுத்த விமரிசம்" மிஸ்டர் த. பா. நித்தியானந்தம்.
23—8—44	ஷ	ஷ	7—"யுத்த முயற்சி".

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ஞூ ஆகஸ்ட்டு மீ 18உ, வெள்ளிக்கிழமை | இதழ் 50

போர் முனை சகோதரத்துவம்

மீட்சிப் படைகள் உலக முழுதும் வெற்றி மேல் வெற்றி பெற்றுக் கொண்டு இப்போது முன்னேறிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக பிரான்சின் நிலைமை இது தான். நமது படைகள் பிரான்சின் தென்பகுதியில் போய் இறங்கி விட்டன. ஹிட்லருடைய மகா விசுவாசமுள்ள படையினரில் லட்சம் பேர்கள் அடிமாண்டு போனதை நாம் கண்டோம். கடைசியாக கடுந் தடைகளுக் குட்பட்டிருந்த வீர பிரான்சு விடுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பிரான்சு அடைபட்டிருக்கும் சிறைக் கூடத்தின் சாவிகள் ஜெனரல் அய்சினோவர் வசமும் ஜெனரல் சர் மெய்ட்லண்ட் வில்சன் வசமும் அவர்களுடைய படையினர் வசமும் தான் இருக்கின்றன. இந்தப் படைகள் பிரான்சை மீட்பதோடு மட்டும் நின்று விடா. உலகமே இது வரை கண்டிராத மகா கொடுமைகளினின்று ஐரோப்பா முழுதுமே, உலக முழுதுமே மீட்கப்படும் வரை, இந்தப் படைகள் முன்னேறிக் கொண்டே போகும்.

பி.பி.சி. வானொலி நிலையத்தார் 'வி' என்பது வெற்றியின் சின்னம் எனக் கூறியது ஐரோப்பாவிலுள்ள கோடிக் கணக்கான மக்களுக்கு ஊக்கந் தந்தது. இந்தத் தாரக மந்திரம் வெற்றியும் ஊக்கமும் அளிக்கிறது. எல்லா நாடுகளிலும் இரகசியப் படையினரும் சுதந்தரக் கட்சியினரும் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அரண்களி லிருந்த ஜெர்மன் படைகளை நமது வீர 8-ம் படையினர் தாக்குவதற்கு, ப்ளாரென்ஸ் நகர மக்கள் உதவும் பொருட்டு, போலீசாரைப் போல் மாற்றுடை யணிந்து கொண்டிருந்தார்கள். யுகோஸ்லாவிய மலைகளில், மார்ஷல் டிட்டோ போராடிக் கொண்டிருக்கிறார். போலந்தில் கிளர்ச்சிகள் கிளம்புகின்றன. தாம் ஈவிரக்கமில்லாமல் கூட்டங் கூட்டமாக மக்களைக் கொல்லுவதனால், இந்தக் கிளர்ச்சிகளை யொடுக்கி விடலாமென்று நாஜிகள் நம்பிக் கொண்டிருந்தார்கள். பிரான்சில் பதுங்கிப் போராடுகிறவர்கள் இருக்கின்றனர். சுயேச்சை பிரஞ்சுக்காரர்களுக்கு இரகசியமாக உதவி புரிகிறவர்களும் இருக்கிறார்கள். ஜெனரல் டி கால் தலைமையில் சுயேச்சை பிரஞ்சுப் படையினர் மகத்தான முறையில் இப்போது போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவையும் குறித்து நாம் கேள்விப்பட்டோம்.

பிரான்சின் துரோகிகள்

பிரஞ்சு மக்களோடு நாம் மேலும் மேலும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறோம். நமது மீட்சிப் படையினர் பிரான்சை மீட்கும் பொருட்டு வெகுவாக முனைந்திருக்கின்றனர். என்றாலும் ஒரு விஷயத்தை நாம் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். பிரான்சின் மீட்சிப் போராட்டமோ, காட்டுமிராண்டிகளும் கொள்ளைக்காரர்களுமான நாஜிகளுடனும், நாஜி இரகசியப் போலீசாருடனும் நடந்துவரும் போராட்டம். இது இன்னும் நின்றபாடில்லை. சென்ற 1940-ம் வருஷம் ஜூன் மாதம் டிகால் கூறினார்: "ஒரு போராட்டத்தில் பிரான்ஸ் தோற்றது; என்றாலும் அது அடியோடு தோற்றுவிடவில்லை". இந்தப் போராட்டத்தை நடத்துகிறவர்கள் ஜன நாயகத்தின் தன்னலமற்ற நண்பர்கள். அவர்கள் கையாளும் ஆயுதங்கள் டாங்கிகளும், விமானங்களும், மோட்டார் படைகளுமல்ல; ஆனால், புத்திசாலித்தனம், எதிரிகளைக் கவிழ்ப்பதற்குச் சதி செய்தல், இரகசிய வெளியீடுகள் முதலியவற்றைக் கொண்டு தான் போராடுகிறார்கள்.

இவர்கள் விஷி பேர்வழிகளோடு தான் போராடினார்கள். விஷி பேர் வழிகளோ மகா கொடிய எசமானர்கள். இவர்களுள் முக்கியமான போலித் தலைவர்கள், லவால், டார்னாண்ட், கரேல் டியட் முதலியோர். ஜெர்மனிக்குப் பிடியாட்களும் மூலப் பொருட்களும் உதவும் ஒரு தொழிற்சாலையாக இவர்கள் பிரான்சை ஆக்கி விட்டார்கள். "யாரேனும் பட்டினி கிடக்க நேருமானால், அது ஜெர்மானியா யிருக்காது" என்று கோப்பல்ஸ் 1942-ம் வருஷத்தில் கூறிய வார்த்தைகளுக்கு ஒத்திருக்கிறது, இவர்கள் செயல்.

பிரான்சு நாட்டு ஆண்களையும் பெண்களையும் லட்சக் கணக்கில் கூட்டங் கூட்டமாகக் கொன்று குவித்தவர் டார்னாண்ட். இவரும் இவருடைய முரட்டுக் கூட்டத்தாரும், "கிளர்ச்சி நேராது தடுக்கும் பொருட்டு" பலரைக் கைதியாக்கினர்; ஜாமீன்தாரர்களாகப் பலரைப் பிடித்தார்கள். கூட்டங் கூட்டமாகக் கொலை செய்தார்கள். பிரான்சில் 16 வயதுக்கு மேல் 60 வயதிற்குட்பட்ட எல்லா ஆண்களையும், 18 வயதிற்கு மேல் 45 வயதிற்குட்பட்டவர்களும் குழந்தைகளில்லாதவர்களுமான பெண்களையும் கட்டாய வேலை செய்யும்படி ஜெர்மன் தொழிற்சாலைகளுக்குப் பிடித்தனுப்பியவர் தான் டியட்.

வழிப்பறிக் கொள்ளைக்காரர்

இங்கே வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 'மாக்குவிஸ்' என்று பெயர். எதிரிகளுக்குச் சேதம் விளைப்பதில் இவர்கள் கை தேர்ந்தவர்கள். இப்போது அவர்கள், பாலங்களைத் தகர்த்துக் கொண்டும், ரயில் வண்டிகளைக் கவிழ்த்துக் கொண்டும், பின்வாங்கியோடும் ஜெர்மன் படைகளைப் பல வகைகளிலும் அல்லற்படுத்துகிறார்கள். மின்சார நிலையங்களை அழிக்கிறார்கள். தொழிற்சாலைகளைத் தகர்க்கிறார்கள்; எதிரிக்கு எந்தெந்த

வகைகளிலெல்லாம் தொந்தரவு செய்ய முடியுமோ அப்படியெல்லாம் செய்கிறார்கள். இந்த ஸ்தாபனத்தார் தம்மை நன்கு அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ஸ்தாபனத்தின் பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு வெகு எளிதில் போகிறார்கள். சில கிராமங்களில் தம் பயிற்சிகளை வெளிப்படையாகவே நடத்துகிறார்கள். பிரான்சின் இந்த வீர மக்கள் வசம் பார்டோ நகரம் இருப்பதாக மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் அறிவிக்கிறார்.

யுத்தத்தினால் பிரான்சுக்கு ஏற்பட்ட பலா பலன்கள் உலகத்திற்கும், குறிப்பாக இந்தியாவிற்கும் ஏற்படுமென்று எதிர்பார்க்கலாம். பிரான்சுக்கு, ஒற்றுமையினால் உண்டாகும் நன்மைகள், ஒன்றுபட்டுப் போராட வேண்டிய அவசியம், பொது எதிரியை வெல்லும் பொருட்டு அற்பத்தனத்தையும் அரசியல் வேற்றுமைகளையும் விட்டுக் கொடுத்தல் முதலிய உண்மைகளைக் குறிப்பாக இந்தியாவிற்கு உணர்த்திற்று. இருந்தால் சுதந்தர வீரனாயிருக்க வேண்டும், அல்லது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகியா யிருக்க வேண்டும். ஹிட்லரின் கொள்கைகளுக்குச் சாதகமாக அல்லது விரோதமாக விருக்க வேண்டும். பண்டையப் பழக்க வழக்கங்களிலே மகா பற்றுதலுடைய பிரஞ்சுக்காரர்களும் கூட வெகு நாட்களுக்கு முன்பே தாம் எந்தக் கூட்டத்தைச் சார்ந்திருக்க வேண்டுமென்று முடிவு கட்டி விட்டார்கள். உள் நாட்டிலுள்ள பிரஞ்சுப் படைகளின் பலமே இதற்குப் போதிய சான்றாகும்.

இந்தப் படையினருக்கும் பிரான்சுக்கும் டி கால் தான் தலைவர் என்று உத்தியோக தோரணையில் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது. இந்தக் கடுமையான பருவத்தில் அவர் மன உறுதியோடு இருந்து வந்ததனால் அவருக்கு இப்பதவி வாய்த்தது.

மன்னர்பிரானின் ஊக்க மூட்டும் மொழிகள்

கிருஸ்மஸ் விழாவன்று நமது மன்னர்பிரான் தன் பிரசங்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :—

"ஒவ்வொரு நாட்டிலும் ஒரு புது நம்பிக்கை தோன்றுகிறது. தியாகத்தில் ஒன்று பட்டிருந்தால் தான், மீட்சி பெறும் ஆற்றலும், தம்மைத் திருத்தி யமைத்துக் கொள்ளும் ஆதிக்கமும் உண்டாகும் என்னும் நம்பிக்கை தான் அது ..கஷ்டத்திலிருந்து ஒரு புதிய வழி பிறக்குமென்றும், தியாகம் செய்வதனால் ஒரு புதிய சகோதரத்துவம் பிறக்கும் என்னும் நம்பிக்கையில் நாம் ஆறுதல் அடைவோமாக!"

இந்த ஊக்கந் தரும் மொழிகள் வீணுக்காகக் கூறப்பட்டவையல்ல. இந்த நெருங்கிய ஒற்றுமை பற்றி, பொறுப்புள்ள பெருந் தலைவர்களெல்லாம் வற்புறுத்தி யிருக்கிறார்கள். இதை ஒரு தெய்வீக ஒற்றுமை என்றே சொல்ல வேண்டும். நேசப் படையினரை இது ஒன்று படுத்துகிறது. எதிரியின் இராணுவ பலத்தை நசுக்கும் கடைசிப் போராட்டத்தில் இவர்களெல்லோரும் ஒன்றுபட்டிருக்கின்றனர். இந்த அற்புதமான உணர்ச்சிதான் நமக்கு வெற்றி யளித்துக் கொண்டு வருகிறது. ஐரோப்பாவிலும் பிறவிடங்களிலும் கொடுமைப் படுத்தப் பட்டும் தாழ்த்தப்பட்டுமுள்ள மக்களுக்கு, சரியான நாகரிக நிலை வாய்க்கும்படி வெற்றி கிடைக்கும்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

பிரான்சுக்குப் பெருவாரம்; ஐரோப்பா மீட்சி

இந்த வாரம் முழுவதும் நேச நாடுகளுக்கு வெற்றி எனக் குறிப்பிடுவது ஊக்கந் தருவதா யிருக்கிறது. முதலில் ப்ளாரென்ஸ் மீண்டது என்னும் செய்தி கிடைத்தது. அதே சமயத்தில் வான் க்ளூகின் 7-வது ஜெர்மன் படை வளைந்துக் கொள்ளப்பட்டது என்னும் செய்தி வந்தது. அதையடுத்து ரிவேரா திடீரென்று தாக்கப் பட்ட செய்தி வந்தது. மகத்தான தோர் தாக்குதல் திட்டம் எவ்வித இடையூறு மில்லாமல் இனிதே நிறைவேறியது. 14,000 விமானக் குடைப் படையினர் நைஸுக்கும் கான்னிசுக்கும் பின் புறத்தில் 25 மைல்களுக்கு அப்பால் இறக்கப்பட்டனர். இந்தத் தாக்குதலில், வெற்றி பெறும் பொருட்டு, டச்சு, கிரேக்க, போலந்து நாடுகளின் பல வகை விமானப் படைகளும் பல வகைக் கப்பற் படைகளும் பங்கு கொண்டன.

எல்லா நேச நாட்டுப் படைகளுக்குள்ளாகவும் ஏற்பட்டிருக்கும் தலை சிறந்த ஒற்றுமைக்கு அறி குறியாகவே இது விளங்குகிறது. ஆகவே தான் ஜெர்மன் ஆதிக்கத்தை நிர்மூலப்படுத்தும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறது. ஐரோப்பியப் பெரும் போரில் நேச நாடுகளின் விமானப் படை மகத்தான பங்கு கொண்டிருக்கிறது. நார்மண்டியில் சிக்கிக் கொண்ட ஜெர்மன் படைகளுக்கு மேலே, சென்ற செவ்வாய்க்கிழமை இவை 6,000 முறை வட்ட மிட்டன. இந்தப் படைகள் தப்பி ஓடி விடாதபடி ஹாலந்து, பெல்ஜியம், ஜெர்மனி ஆகிய நாடுகளின் மேல் வெடி குண்டுகள் வீசி, போக்கு வரவுப் பாதைகளை நாசஞ் செய்தன. ஹிட்லரோ அவரது பிடிவாத குணமுள்ள "எஸ். எஸ்." படையோ, ஜெர்மன் இராணுவமோ விரைவில் சிதைந்து விடுமென்று யாரும் எதிர்பார்க்க வில்லை. கடைசிவரை அவர்கள் போராடியே தீருவார்கள். இதுவரை உலகில் வாழ்ந்தவர்களில் மகா மோசமான ஒருவரின மகா அருவருக்கத்தக்க திட்டங்களும் பெரிதும் அருவருக்கத்தக்க ஆதிக்கமும் நொறுங்கும் கடைசி கட்டத்தின ஆரம்பத்தை நாம் காண்கிறோம்.

பல போர் முனைகளைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருக்கும் ஹிட்லருக்கு இரவெல்லாம் தூக்கம் பிடிப்பதில்லை. இந்தப் போர் முனைகளிலுள்ள நேசப் படைகள் ஜெர்மனியை நெருக்கி நாஜிஸத்தின் உயிரைப் போக்கி விடும். எவ்வளவு சிறந்த முறையில் மீட்சிப் படைகள் ஒத்துழைத்து வெற்றி பெற்றன வென்பதற்கு இந்த வாரச் சம்பவங்களே தலை சிறந்த சான்றுகளாம். ஹிட்லரின் கொடுங்கோன்மைக்கும் கொள்ளைக்கும் உட்பட்டு, அடிமைகளாகக் கஷ்டப்படும் கோடிக்கணக்கான ஐரோப்பிய மக்களை விடுவிப்பதற்கு, பிரான்சு மீட்சி முதற்படியாகும். பிரஞ்சு மக்கள் அனைவரும் ஆனந்தக் கண்ணீர் பெருக, "பிரான்சு நீடு வாழ்க" எனக் கூவுவார்கள். நாமும் அப்படியே கூவுவோமாக!

ப்ளாரென்ஸ் மீட்சி

மிஸ்டர் சர்ச்சில் இத்தாலியப் போர் முனைக்குச் சென்றிருக்கிறார். அதை விட முக்கியமான மற்றோர் செய்தியுண்டு. அது தான் ப்ளாரென்ஸ் மீட்சி. ஜெர்மன் படையினரின் கண் முன்பே இத்தாலியச் சுதந்திரப்படையினர் நிகழ்த்தியுள்ள வீரச் செயல்கள் பெரும் புகழுக் குரியன. அந்த வீரச் செயல்களில் ஒரு விசித்திரமான சம்பவமும் நடந்தது. அந்தச் சுதந்திரப் படையினர் ப்ளாரென்ஸ் போலீசாரைப் போல் வேடம் பூண்டு கொண்டு ஜெர்மன் படையினரை ஏமாற்றினர். உடனடியாக நேச நாட்டுப் படைகள் என்ன செய்ய வேண்டுமென்றால், அந்நகர மக்கள் உண்ண உணவளிக்க வேண்டும். அதே சமயத்தில் நேசப் படைகள் தாக்கிக் கொண்ட அந்நகரத்திற்கு வெளிப்புறத்திலிருக்கிறார்கள். உள்ளே நுழைவார்களானால், ஜெர்மானியர்கள் அந்த அழகிய நகரத்தை வெடி

(6-ம் பக்கம் பார்க்க)

சென்னை சாப்பர்களின் சிறப்பு

பர்மா போர் முனையில் ஆற்றிய அருஞ் செயல்கள்

(காப்டின் ஜே. இ. பார்னஸ் எழுதியதன் மொழி பெயர்ப்பு)

(மகா கஷ்டங்களுக் கிடையே சென்னைப் படைகள் மணிப்பூர் ரோட்டைப் போட்டு முடித்த வீரக் கதை கீழே காண்க. அங்கிருந்து திரும்பித் தத்தம் சொந்த ஊர்களுக்கு வந்திருக்கும் படை வீரர்கள் இவற்றை மேலும் விளக்கிக் கூறுவார்கள்.)

ஜப்பானியர்களை பர்மாவினின்று விரட்டியடிக்க வேண்டும். நமது பிரிட்டிஷ் படைகளும் இந்தியப் படைகளும் போகும் பொருட்டு, இரண்டு மலை ரோடுகள் போடும் வேலையில் நான் சென்ற 18 மாதங்களாக ஈடுபட்டிருந்தேன். இந்த ரோடுகள் முதலில் பர்மாவிலிருந்து நம் படைகளை வெளியேற்றிக் கொண்டு வரும் பொருட்டு, கரடு முரடாக அமைக்கப்பட்டது. பிறகு, இந்தியாவின் கிழக்கு எல்லைப்புரத்திலுள்ள படைகள் தக்கபடி காவல் புரியும் பொருட்டு, சற்று நன்றாக அமைக்கப்பட்டது. இப்போது மீண்டும் தம் படைகளை பர்மாவிற்குக் கொண்டு போக வேண்டி, அந்த ரோடுகளை மேலும் நன்றாகச் செய்து முடித்தனர். மணிப்பூர் ரோடு முதலிய ரோடுகளைப் போட்டு முடித்தது தலை சிறந்ததோர் சிற்பத் தொழிலென்று சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

காடுகளில் 400 மைல் ரோட்.

இரண்டு வருஷங்களுக்கு முன் மழையில்லாத காலத்திலே மோட்டார் போகக்கூடிய ரோடு 180 மைல் தூரத்திற்கு இருந்தது. இப்போது 300 மைல் தூரத்திற்கு இரட்டைப் பாதை ரோடு போடப்பட்டிருக்கிறது. இதற்குக் கருங்கல் அஸ்திவாரம். 200 மைல் தூரத்திற்குத் தார் போட்டிருக்கிறது. நியூயார்க் நகரத்திலிருந்து கனடாவிற்கு சுமார் 400 மைல் தூரம். இது 6,000 முதல் 7,000 அடி உயரத்தில் மலை வழியாகவும் பள்ளத்தாக்குகள் வழியாகவும் செல்லுகிறது. வழியேயுள்ள பனி காட்டாறுகளும் மழை காலத்தில் பெருகி விடுகின்றன. அந்த இடம் முழுதும் ஒரே மலைக் காடு தான். கடும் மழை ஒருபுரம், மலேரியா மற்றொருபுரம். உணவுப் பொருள் பஞ்சம் இன்னொருபுரம். இவ்வளவு நிர்ப்பந்தமான நிலைமையில் தான் இந்த ரோடுகள் போடப்பட்டன.

அங்கிருந்த ஒவ்வொருவரும் தாக்கிடப்பட்ட வேலையைச் செய்து முடிக்க வேண்டுமென்னும் மன உறுதி கொண்டிருக்காவிட்டால், இந்த வேலையை ஒரு போதும் செய்து முடித்திருக்க முடியாது. ஒரு பிரிட்டிஷ் 'புல் டோசர்' வண்டியின் டிரைவர், தன் வண்டியை ஓட்டிக் கொண்டு கரடு முரடான பாதை வழியே போகும் போது, அந்த வண்டி வழுக்கி ஒரு மலையினின்று 200 அடி ஆழத்தில் வீழ்ந்தது. என்றாலும் அந்த டிரைவர் மனம் பதறாமல் தன் இருக்கையிலேயே இருந்து, தன் வண்டி தலை கீழாக விழுந்துவிடாதபடி காப்பாற்றிக் கொண்டார். பிறகு அக்கம் பக்கத்திலிருந்த கிராமத்தாரை அழைத்துக் கொண்டு வந்தார். தன் வண்டியிலிருந்த இரும்புக் கம்பியைக் கழற்றினார். அவர்களின் உதவியால் அதன் ஒரு நுனியை மேலே ரோட்டிலுள்ள பெரிய மரத்தில் கட்டச் செய்து, மறு நுனியைத் தன் வண்டியில் கட்டிக் கொண்டு தன் வண்டியை மேலே ஓட்டிக் கொண்டு ரோடு வந்து சேர்ந்தார்.

சென்னை வாசிகள் ஒப்புயர்வற்றவர்கள்

இந்திய சிப்பாய்களை வெல்ல யாராலும் முடியாது. சென்ற ஏப்ரல் மாதம் ஒரு பாலத்தைக் கட்டிக் கொண்டிருந்தோம். அப்போது சென்னை லான்ஸ் கார்ப்போரல் ஒருவர் கடுமையாகக் காயப்பட்டார். அவரை நான் என் மோட்டார் காரில் ஏற்றிக் கொண்டு 12 மைல் தூரம் கரடு முரடான ரஸ்தா வழியாகக் கொண்டு வந்து காயப்பட்டவர்களைப் பராமரிக்கும் இடத்தில் விட்டு, "உமக்கு சௌக்கியமாகிவிடும், டாக்டர் உம்மை நன்றாகக் கவனித்துக் கொள்ளுவார். விரைவில் குணப்படுத்திக் கொண்டு திரும்ப வந்து சேர்" என்று சொன்னேன். அதற்கு அவர், "நான் இங்கிருக்க மாட்டேன்; நான் என் செக்ஷனோடு போய்ச் சேர வேண்டும்; பால வேலை இன்னும் முடியவில்லையே" என்று விடையளித்தார். இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர் மரணமானார்.

அங்கிருந்த நிலைமை பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களுக்கு எப்படிப் புதியதாயிருந்ததோ அது போலவே தான் மற்றப் படையினருக்கு மிருந்தது. இங்குள்ளவர்களில் பெரும்பாலோர் தென்னிந்தியர்கள். இவர்கள் மூடு பனி, காட்டு வாழ்க்கை, மலைவாசம், மலேரியா, உணவுப் பஞ்சம், தண்ணீர்ப் பஞ்சம் ஆகியவற்றை ஒரு போதும் அறியாதவர்கள். மாதக் கணக்காக நாள்தோறும் 12 மணி முதல் 14 மணி நேரம் கடும் மழையில் நனைந்து கொண்டிருக்க வேண்டியிருந்தது. என்றாலும் புதிதாகப் படையில் சேர்ந்தவர்கள் உள்பட அனைவரும் குறை சொல்லாதபடி மகிழ்ச்சியோடேயே இருந்து வருகின்றனர். இதில் மிகவும் விசித்திரமானதோர் விஷயம் என்னவென்றால் நிலைமை மிகவும் கடுமையாகும் போது தான் வியாதியும் குறைகிறது.

ரோடு எப்படிப் போடப்பட்டது

முன்னதாக, பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் கமிஷன் பெறாத உத்தியோகஸ்தர்களும் போனார்கள். இவர்கள் காடுகளிலேயே வசிக்க நேர்ந்தது. காடுகளை வெட்டிக் கொண்டு ரோடு போடுவதற்கு ஏற்ற தரை எது என்று தேடிக் கண்டு பிடிக்கிறார்கள். இவர்கள் வகுக்கும் பாதைகளில் பெரும் பாறைகள் எதிர்ப்படலாகாது. மணற் பாங்கான தரையாயிருக்கக் கூடாது. ஏனென்றால், மழை காலத்தில் அரித்துக் கொண்டு போய் விடும். கரிசல் தரையாயிருந்தால் மழை காலத்தில் தண்ணீரை உறிஞ்சிக் கொள்ளும். குறுக்கேயுள்ள எண்ணற்ற ஆறுகளுக்கும் ஓடைகளுக்கும் பாலங்கள் கட்ட இடங்கள் குறிப்பிட வேண்டும். இவர்களுக்குப் பின்னே வெகு தூரத்தில் ஒரு 'டோசர்' கிளம்பி வெகு வேகமாகத் தண்டவாளத்தைப் போட்டுக் கொண்டு போகிறது. பிறகு தான் இந்தியன் சாப்பர்கள் வருகிறார்கள். எதிர் படும் பாறைகளைத் தகர்க்கிறார்கள்; மரங்களை வீழ்த்துகிறார்கள். ஓடைகளுக்கும் ஆறுகளுக்கும் பாலங் கட்டுகிறார்கள். ரோடுகள் போடுவதற்கு ஜெல்லி தயாரிக்கும் இடங்களை ஆரம்பிக்கிறார்கள். கற்களை நொறுக்கும் இயந்திரங்களைக் கொண்டு வேலை செய்கிறார்கள். தண்ணீர் வசதிகள் செய்யக் கூடிய வகையைத் தேடியமைத்துக் கொள்ளுகிறார்கள். ஸ்டோர் சாமான்களுக்கு ஆர்டர் அனுப்ப வேண்டியிருந்தது. கைவசமுள்ள பொருட்களைக் கொண்டு, வேண்டிய வசதிப் பொருட்களைச் செய்து கொள்ள வேண்டியிருந்தது. நாள்தோறும் அவர்களுக்கு இராணுவப் பயிற்சியும் அளிக்க வேண்டியிருந்தது. ஏனென்றால், சாப்பர்கள் மற்ற வேலைகள் செய்வதோடு, போராடவும் தெரிந்திருக்க வேண்டும்.

பெரு மழையும் மலேரியாவும்

மழை நீர் வடி கால்களைத் தக்கபடி பராமரித்து வந்தால், ரோடுகளுக்குப் பழுது ஏற்படாது. நான்கு மாதக் கடு மழை காலத்தில், ஒரு முறை, ஒரு மாதமெல்லாம் கஷ்டப்பட்டு போட்டிருந்த ரோட்டை, ஓரிரவு மழை அரித்து நாசப்படுத்தி விட்டது.

ஒரு காலத்தில் ஜப்பானியரை விட மலேரியா தான் பெருந் தொந்தரவாக விருந்தது. ஆனால் வைத்தியப் படையினர் அரும்பாடு பட்டு உழைத்து, அந் நோய் வராதபடி தடுப்பதற்கான பல வைத்திய முறைகளையும் கையாண்டார்கள். இவற்றின் உதவியால் நிலைமை ஒருவாறு மாறியிருக்கிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு மலேரியா நோயால் நேர்ந்த சேதத்தில் ஒரு சிறு பகுதி தான் இப்போது நேருகிறது.

மனச் சோர்வு

மனச் சோர்வு அவ்வளவு கஷ்டமானதல்ல. பல மேலேயோ, சாலிலேயோ சினிமாப் படங்கள் பார்க்க முடியாது; பத்திரிகைகள் படிக்க முடியாது. வேண்டிய பொருட்களை வாங்கிக் கொள்ள கடைகள் கிடையாது. கச்சேரிகள் நடத்துவிக்க முடியாது. பெண்கள் கூட்டுறவுக்கு இடமில்லை. கடி கூடக் கிடையாது. புட்பால், ஹாக்கி முதலிய பந்தாட்டங்கள் ஆட முடியாது. ஏனென்றால் மலை மீது பந்த வெளிகள் கிடையாது. உத்தியோகஸ்தர்கள் செய்யும் பிரசங்கங்களும் படையினர் தாமே நடத்திக் கொள்ளும் கச்சேரிகளுந் தான் அவர்களுடைய மனச் சோர்வை யகற்றுகின்றன. நான் சமீபத்தில் விட்டு விலகி வந்த படை, போர் முனையின் முன்னணிப் பகுதியிலிருந்தது. அது போன்ற இடங்களில் இராக்காலம் சற்று கஷ்டமாகத் தான் இருக்கும். பொழுது போனது முதல் விடிகிற வரை பூரண இருட்டடைப்புத் தான்.

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

குண்டுகளால் தகர்த்துப் பாழாக்கி விடுவார்கள். இப்படிப்பட்ட இழி தொழில் புரிய அவர்கள் ஒரு போதும் பின்வாங்குவதில்லை. என்றாலும் சென்ற 8 நாட்களாகப் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கும் அந்நகர மக்களுக்கு டன் கணக்கில் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

போராட்டத்தின் புதிய கட்டம்

நிலைமை உச்ச நிலையை விரைவாக அணுகிக் கொண்டிருக்கிறது என்பதற்கான அறிகுறிகள் தெளிவாகத் தெரிகின்றன. பெருந் தலைவர்களின் பிரசங்கங்களும் போர் முனைகளில் நிகழும் சம்பவங்களும் இதை வலியுறுத்துகின்றன. இரண்டாம் போர்முனை ஆரம்பிப்பதற்கு பெய்யாபுரியின் வீழ்ச்சி எப்படி ஒரு அறிகுறியா யிருந்ததுவோ, அது போலவே, ப்ளாரென்ஸ் வீழ்ச்சி மகத்தான போராட்ட ஆரம்பத்திற்கு அறிகுறியாகும். இதற்கிடையில் மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் விஜயத்தை யடுத்து, மிஸ்டர் சர்ச்சில், மார்ஷல் டிட்டோ, யூகோஸ்லாவிய முதன் மந்திரி, பெரும் படைத் தலைவர்கள் ஆகியோர் இத்தாலியில் கூடி யிருக்கிறார்கள். அடுத்

மிஸ்டர் சர்சில்.

தாற்போல் நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை நிர்ணயிக்கும் பொறுப்பு மிகவும் கெட்டிக்காரர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது என்று நமக்குத் தெரியும். ஹிட்லர் கோட்டையின் தென்கிழக்குத் தலைவாசலும் தென் மேற்குத் தலைவாசலும் பலவீனமா யிருக்கின்றன.

சந்தர்ப்பம் இடைக்கிற போது அவை நொறுக்கித் தள்ளப்படும். ஜினோவா, மார்செய்ல்ஸ், ரோன் பள்ளத்தாக்கு ஆகியவற்றை நேசப் படைகள் தாக்கியது மிகவும் முக்கியமானது தான். அதைப் போலவே முக்கியமானது தான் யுகோஸ்லாவேகியா, ஹங்கேரி, ருமேனியா ஆகிய நாடுகளின் முக்கியமான பகுதிகளைத் தாக்கியதுங் கூட. இவை அனைத்தும் ஜெர்மனியரின் கஷ்ட காலத்தின் அறிகுறிகளாம்.

போராட்டத்திற்குக் கடைசி மெருகு

பெரும் சம்பவங்கள் நிகழப் போகின்றன. பிரிட்டிஷ் முதன் மந்திரி மிஸ்டர் சாச்சில் இத்தாலியப் போர் முனைக்குப் போனார். அதே சமயத்தில் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் பசிபிக் போர்முனைக்குச் சென்றார். இவர்கள் ஏன் செல்லவேண்டும்? இது முக்கியமானதோர் கட்டம். எனவே, போர்த் திட்டத்திற்குக் கடைசி மெருகு கொடுக்கத் தான் போயிருக்க வேண்டும். பெரும் நாடுகளின் தலைவர்கள் அனாவசியமாகப் பிரயாணம் செய்து தம் பொழுதை வீணாக்கமாட்டார்கள். இந்த உண்மை எதிரிகளுக்குத் தெரியும். இவ்வளவு வேகமாக அவ்விருவரும் ஏன் போர் முனைகளில் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள் என்றால் ஜெர்மானியர்கள் மனதில் பெரும் பீதியை யுண்டாக்க வேண்டுமென்பதை விட, நேச நாடுகளுக்குள் இருக்கும் ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்காக என்று கூறுவது பொருந்தும். போராட்டத்தின் இந்தப் பருவத்தில், நமது மேன்மை தங்கிய வைசிராய் பிரபுவும் இம்பால் பகுதிக்கு விஜயம் செய்தது மிகவும் பொருத்தந் தான். இந்த யுத்தம் ஒரே யுத்தம்; ஆனால் உலகம் முழுதும் விரவி யிருக்கிறது. இரண்டு எதிரிகளைக் கொண்டது. அவர்களின் முக்கியமான இடங்கள் டோக்கியோவும் பெர்லினுந் தான்.

பசிபிக் போர் முனை.

இதை ஒரு சரியான உலக யுத்தம் என்று தான் சொல்ல வேண்டும். தற்போதுள்ள நிலைமையையும் அது எவ்வளவு தூரம் பரந்திருக்கிறதென்றும் சிக்கலான நிலையிலிருக்கிறதென்றும் சீர்தூக்கிப் பார்த்து உணர்ந்து கொள்ள உலக நிலையைக் கொண்டு தான் பார்க்க வேண்டி யிருக்கிறது. குறிப்பாக, பசிபிக் போர் முனையைக் குறித்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகும். அமெரிக்காவிலிருந்து ஹனொலுலு 2,098 மைல்கள். இந்த ஹனொலுலுவிலிருந்து அமெரிக்கப் படைக்கப்பல்களும் துருப்புக் கப்பல்களும், போர்க் கப்பல்களும் 4,000 மைல்கள் தூரம் கடுமையான கடலில் வந்தன. அதாவது, 2,000 மைல் தூரத்திலுள்ள மார்ஷல்ஸ் தீவுகளுக்கு வந்து, அங்கிருந்து மாரியன்னஸ், குவாம், சைபான் ஆகிய இடங்களுக்கு வந்து சேர்ந்தன. இப்போது சைபான் தான் அட்மிரல் நிமிட்சின் தளமா யிருக்கிறது. இங்கிருந்து 700 மைல் தூரத்தி லிருக்கிற போனின் தீவுகளை நோக்கி அமெரிக்கக் கப்பற் படையும் விமானப் படையும் கிளம்பின. அங்கிருந்து ஜப்பான் தீவுகளைத் தாக்க வேண்டி அமெரிக்கப் படைகள் இவ்வளவு தூரம் சாதித்திருப்பது பெரிய காரியம். அன்றியும் அலாஸ்கா பெருவழி வேலையும் ஏறக்குறைய முடிவடைந்து விட்டது என்று ரூஸ்வெல்ட் வெளியிட்டார். ஆகவே, இதுவரை உலகத்திலே நடைபெற்றிராத பெரும் கிடுக்கித் தாக்குதல் ஏற்படக் கூடும். ஒரு பெரும் படை அலூஷியன் தீவுகளிலிருந்தும் மற்றொரு பெரும் படை போனின் தீவுகளி னின்றும் கிளம்பித் தாக்கக் கூடும்.

எதற்கு ஜப்பான் பெரிதும் அஞ்சுகிறது?

ஜப்பானிய நகரங்கள் இப்போது தாக்கப் படுகின்றன. ஜப்பானுடைய கடல் வழிகள் துண்டிக்கப் பட்டு விட்டன. கப்பற் போராடவும் ஜப்பானால் இயலவில்லை. இவற்றிற்குத் தான் ஜப்பான் பெரிதும் அஞ்சுகிறது? இனி இவற்றைத் தவிர்த்து வைக்கவும் முடியாது. தன் பலவீனத்தை ஜெர்மனி உணர்ந்து கொண்டிருப்பது போலவே, ஜப்பானும் உணர்ந்து கொண்டிருக்கிறது. போராட்டத்தில், தான் வீரன் சூரன் எனப் பீற்றிக் கொள்ளுவது தன் பலவீனத்தின் அறிகுறியாகும். இந்த வார்த்தைகள் உண்மையானவை தானா வென்று பரீட்சிக்கப்படும் வரை, ஜப்பானிய மக்களைத் தூண்டித் திரட்டுவது வெகு எளிது. அதாவது, ஜப்பானிய மக்கள் மனோ பல முடையவர்கள் என்று தான் அர்த்தம். இப்போது; ஜப்பானியர்கள் கூறிய திரிபு மொழிகளும் பிரசார வார்த்தைகளும் பரீட்சிக்கப்படப் போகின்றன. அதன் பலா பலன்களை ஜப்பானியப் பொது மக்கள் காணத் தான் போகிறார்கள். இனி ஜப்பானிய அரசாங்கத்திற்கோ, ஜப்பானிய பாசிஸ்டுகளுக்கோ, ஜப்பானிய வியாபாரிகளுக்கோ, தம் பொய்ம்மையை மறைத்துச் சமாளிப்பதென்பது எளிதான காரியமல்ல. நாகசாக்கி துறைமுகத்தின் மீது வெடி குண்டுகள் விழுந்ததை ஜப்பானிய மக்கள் கண்டனர். அடுத்து எந்த ஊர் தாக்கப் படும் என்று அவர்கள் கேட்பது சகஜந் தான். பசிபிக் மகாசமுத்திரத்தி லுள்ள ஆயிரக் கணக்கான தீவுகள் மீண்டும் கை பற்றப்பட்டபோது, அங்கிருந்த பதினாயிரக் கணக்கான ஜப்பானிய மக்கள் அழிய நேர்ந்தது. இந்த உண்மையும், தாமே உலகத்தை ஆளப் பிறந்தவர்கள் என்னும் மமதையும் கொண்டவர்களின் நெஞ்சைப் பிளக்கும். எப்படி மரத்தாலும் காயிதத்தாலும் அமைந்த ஜப்பானியப் பட்டணத்தில் தீப்பற்றினால் வெகு சீக்கிரத்தில் அழிந்து போகுமோ, அது போலவே, தான் இந்த உண்மைகள் வெளியாகும் போது, அதாவது வெடி குண்டுகள் அவர்கள் ஊர்களில் வெடித்து நாசப்படுத்தும் போது, அவர்களுடைய கர்வமும் அகம்பாவமும் அழிந்து போகும். அமெரிக்கப் படை பலத்தைக்

(10-ம் பக்கம் பார்க்க)

விசேஷ சம்பவங்கள்!

பிரதம மந்திரி சர்ச்சில், இங்கிலாந்திலிருந்து நார்மண்டிக்கு விஜயம் செய்து, சேனாதிபதிகளைப் பார்த்துப் பேசிவிட்டு, அப்பால், நேரே இத்தாலியில் சென்றிறங்கினர் என்பது சென்ற வாரம் நடந்த பல விசேஷ சம்பவங்களில் ஒன்றாகும். சில தினங்களுக்கு முன் தான், ஜார்ஜ் மன்னர் இத்தாலிக்கு விஜயம் செய்து, இந்தியப் படைகள் போராடுவதை, அசல் போர்க்களத்திற் கருகிலிருந்தே கவனித்தார். என்ன ஆச்சரியம்! இம்மாதிரி, பிரிட்டிஷ் சாம்ராஜ்யாதிபதி ஒருவரும், அவரது பிரதம மந்திரியும் இரண்டு வருடங்களுக்கு முன்னால் இவ்வாறு ஐரோப்பா பக்கம் போகத் துணிந்திருப்பார்களா? அவர்கள் இவ்வாறு தைரியமாக இத்தாலியில் வந்திறங்கி, சாவதானமாகச் சுற்றுப் பிரயாணங்களை நடத்துவார்கள் என்று ஜெர்மானியர் உள்பட யார் தான் எதிர் பார்த்திருப்பார்கள்? இத்தாலியிலே பிரதம மந்திரி சர்ச்சில் அமெரிக்க, பிரிட்டிஷ் கடற்படைத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினதாகத் தெரிகிறது.

தெரிவதென்ன?

இதிலிருந்து பல விஷயங்கள் வெளியாகின்றன. சீமையிலிருந்து இத்தாலிக்கு வரும் பாதையில் அதிக ஆபத்தில்லை; இத்தாலியிலும் சரி, பிரான்ஸிலும் சரி ஜெர்மானியருக்கு விமான பலம் என்பதே அதிகமில்லை; (அதிருந்தால், இவ்வாறு பிரதம மந்திரி முதலியோர் துணிந்து அங்கெல்லாம் செல்லமுடியுமா?) கூடிய சீக்கிரமே மத்யதரைக் கடல் பிரதேசத்திலிருந்து ஏதோ ஒரு பெரிய நடவடிக்கையை நேசதேசத்தார் எடுக்கப் போகிறார்கள் என்றெல்லாம் யூகிக்கலாம் போலிருக்கிறது.

ஜனாதிபதி எங்கே?

பிரதம மந்திரி சர்ச்சில் இத்தாலியிலிருக்கும் இச்சமயத்திலே, அமெரிக்க ஜனாதிபதியும் வாஷிங்டன் நகரத்திலே 'ஆப்ஸெண்'டாக இருக்கிறார் என்ற செய்தி வெளியாகியது. அவர் ஊரை விட்டுக் கிளம்பியே இரண்டு வாரங்களுக்கு மேலாகிறதாம். அவர் ஹொனலூலு தீவிலே காணப்பட்டார். அங்கு பலதரப்பட்ட கடற்படைத் தலைவர்களையும், தென் மேற்கு பஸிபிக் பிரதேசத்திலே செய்த தமது அசகாய சூரவேலைகளால் பிரசித்தமடைந்துள்ள ஜெனரல் மெக் ஆர்தரையும் சந்தித்துப் பேசினர்; முத்துத் துறைமுகத்திலும், அதை ஒட்டிய பிரதேசங்களிலும் செய்யப்பட்டுள்ள யுத்த ஏற்பாடுகளைக் கண்டு பிரமித்துப் போனர்; பஸிபிக் பிரதேசங்களில் இதுவரை அமெரிக்கா அடைந்த வெற்றிகளுக்கு எல்லாம் காரணமாக இருந்தது, இந்தத் துறைமுகத்திலே செய்யப்பட்டுள்ள செளகரியங்கள் தான், என்பதைக் கண் கூடாகக் கண்டார்; இங்கிருந்தே, எவ்வளவு சீக்கிரம் சாத்யமோ அதற்குள் ஜப்பானையே அடைந்து, ஜப்பானின் கொட்டத்தை ஒடுக்கி, திரும்பவும் ஜப்பான் தலைதூக்க வொட்டாது அடித்து, எல்லோரையும் நிம்மதியாக வாழ வைக்கப் போகிறார்கள் அமெரிக்கர்கள் என்பதையும் சொன்னர். அப்பால், அலூஷியன் தீவுகளுக்கு ஒரு யுத்தக் கப்பலில் போயடைந்தார் என்ற தகவல்களை எல்லாம் சென்ற வாரத்தில் உலகோர் கேட்டு வியந்திருப்பார்கள். இந்தச் செய்திகளிலிருந்து, ஜப்பானியரின் ஆர்ப்பாட்டம் பஸிபிக் மகா சமுத்திரத்திலே ஒரு தினுஸாக அடங்கிவிட்டது என்பதை நன்றாகத் தீர்மானிக்கலாம். மேல் அமெரிக்கக் கரையிலே இரண்டு வருடங்களுக்கு முன் கப்பலிலிருந்து பீரங்கிப் பிரயோகம் செய்தார்களல்லவா ஜப்பானியர். அப்படியிருக்க இப்பொழுது, அமெரிக்க ஜனாதிபதி அதே பஸிபிக் மகா சமுத்திரத்தில், அதுவும் கப்பலில் செல்கிறார் என்றால், ஆச்சரியமல்லவா?

இன்னென்று.

கடந்த வாரத்தில் நடந்த இன்னொரு விசேஷ சம்பவம் அமெரிக்கக் கடற் படைகளின் பஸிபிக் அரங்கத் தலைமைக் காரியாலயம் முத்துத் துறைமுகத்திலிருந்து மரியானு தீவிலுள்ள சைபானுக்கு மாற்றப் பட்டிருப்பதுதான். இதன் அர்த்தம் என்னவென்று சொல்ல வேண்டுமா? முத்துத் துறைமுகத்திற்கும் இத்தீவுகளுக்கும் இடையில் உள்ள பிரதேசங்களில் ஜப்பானியரது ஆட்டம் 'க்ளோஸ்' ஆகிவிட்டது என்றுதான் அர்த்தம். அதோடு, அடுத்தபடியாக பலிப்பைன் தீவுகளைக் கைப்பற்றப் போகிறார்கள்; அதற்கான நடவடிக்கைகள் சீக்கிரமே ஆரம்பமாகும் என்பதைத் தான், ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் பிரசங்கமும், மேற்கண்ட சம்பவமும் எடுத்துக் காட்டுகின்றன.

பிலிப்பைன் தீவுகளிலிருந்து, ஜெனரல் மக் ஆர்தர் இரண்டரை வருடங்களுக்கு முன் வெளியேறியபோது, 'திரும்பவும் வருவேன் இங்கு நான்' என்று சொல்லியிருக்கிறார். அது இப்பொழுது பலிக்கப் போகிறுப் போலிருக்கிறது.

என்ன செய்வது?

ச்வாமி, நியூ கினி தீவுகளில் எல்லாம் அமெரிக்கர்கள் பிரமாதமான வெற்றிகளைச் சம்பாதித்திருக்கிறார்கள். கண்ட இடத்தில் எல்லாம் அமெரிக்க விமானங்களும், நீர் மூழ்கிகளும் ஜப்பானிய சரக்குக் கப்பல்களை உதைக்கின்றன. நெடுந்தூரம் தெற்கில் உள்ள தீவுகளுக்கு உதவிப் பொருள்களைக் கப்பல்கள் தானே சுமந்து செல்லவேண்டும்? இப்படி அமெரிக்கர்கள் அக்கப்பல்களை 'காவிந்தா' ஆக்கிக் கொண்டிருந்தால், அத்தீவுகளில் உள்ள ஜப்பானியர் தான் எவ்வளவு காலம் தாக்குப் பிடிக்கமுடியும்?

அவ்வளவு மோசமா?

ஜப்பானிய கப்பற் படையோ எங்கும் துணிந்து வந்து போராட மாட்டேனென்கிறது எப்படிப் போராடுவது? அமெரிக்கக் கப்பற்படை தான் நாளுக்கு நாள், பிரமாண்டமாக வளர்ந்து கொண்டிருக்கிறதே! நூறு விமானந் தூக்கிகள், ஆயிரக் கணக்கான நாசகாரிகள், க்ரூய்ஸர்கள், மற்றும் பல யுத்த, சாமான் கப்பல்கள் எல்லாம் அப்படையிலிருக்கின்றன. அதோடு, ஓய்ந்து தேய்ந்து போயிருக்கும் ஜப்பான் படை வந்து மோத விரும்புமா? அவ்வாறு மோதினல் என்ன ஆகும் என்று தெரியாமல் போகும்படியான மடத்தனம் ஜப்பானியர்களுக்கு இருக்கும் என்றெண்ணுவது சுத்தத் தவறாகும். ஆனாலும் அவ்வளவு மோசமல்ல ஜப்பானியர். ஏதோ பேராசையால் பெரிய காரியத்தில் தலையிட்டுக்கொண்டு, பிரமாதமான சேற்றிலே காலை வைத்துவிட்டார்கள். மாட்டிக் கொண்டு முழிக்கிறார்கள். இப்பொழுது தான் அவர்களுக்குப் புத்தியும் ஞானமும் ஏற்பட்டிருக்கிறுப் போலிருக்கிறது. 'எங்களது கடற்படை ஜப்பான் தீவுகளுக் கருகே தான் போராடும். அதைத் தூர அனுப்பிவிட்டால், அப்புறம் குடி முழுகிவிடுமே!' என்று இப்பொழுது சொல்லுகிறார்கள் ஜப்பானியர்.

ஞானேதயமா?

'நேசதேசத்தார் அசல் ஜப்பான் மீது படையெடுத்தாலும் படையெடுப்பார்கள். அது நடவாத காரியம் என்று சொல்ல மாட்டேன். இப்பொழுதே பூரண முயற்சி எடுத்து, ஆளும் பலமும் திரட்ட வேண்டும்' என்று ஜப்பானியப் பிரதம மந்திரி இப்பொழுது கூறுகிறார்.

இனியும் உண்மையை மறைக்க முடியுமா? அமெரிக்கப் பறக்கும் கோட்டைகள் தான் மூன்று நான்கு முறை ஜப்பான் மீது குண்டுகளை வீசி, கப்பல் தளங்களையும், ஆயுத உற்பத்தி சாலைகளையும் பாழாக்கி விட்டனவே! பாவம்! எக்காலத்திலும் படையெடுப்பு என்பதையே அறிந்திராத ஜப்பானுக்கும் படையெடுப்பின் கோரத்தைக் காணும் காலம் வரப்போகிறதே! தானாக இழுத்துவிட்டுக் கொண்ட வம்புதானே இது? 'கூடிய சீக்கிரமே ஜப்பானில் மற்றொரு மந்திரி சபை மாறுதலிருக்கலாம்; சீனவையும், மற்றப் பிரதேசங்களையும் விட்டுவிடுகிறோம். ஜப்பானை ஒன்றும் செய்யாதீர்கள் என்று புது மந்திரிகள் கெஞ்சிக் கேட்கவலாம்' என்கிறார் ஜப்பானியர் சுபாவமறிந்த வெள்ளைக்காரர் ஒருவர், ஆனல் ரூஸ்வெல்ட் தான் அப்பட்டமாகச் சொல்லிவிட்டாரே, 'இந்த ஜப்பானியரின் வார்த்தைகளை இனி நம்புவதற்கே இல்லை' என்று. ஆகவே கடைசிவரை யுத்தம் நடந்தே தீரும்.

பிரான்ஸிற்கு இடமாற்றம்

சென்ற வாரத்திலேயே, சீமையிலிருந்த நேசதேசப் படைத் தலைமைக் காரியாலயம் பிரான்ஸிற்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, பிரான்ஸிலே நேச தேசப் படைகள் வைத்த கால், சரியானபடி ஊன்றிக் கொண்டு விட்டது என்பதை யூகிப்பது சிரமமல்ல. சும்மா சும்மா ஜெனரல் ஐசன்ஹோவர் சீமைக்கும் நார்மண்டிக்கும் எத்தனை தடவை தான் போவது? பிரான்ஸிலே தான் இனி வேலை யெல்லாம் இருக்கிறது.

வேலையிருக்கே!

பிரான்சை நாஸி ராக்ஷஸனிடமிருந்து விடுவித்து, பிரஞ்சு மக்களுக்குச் சுதந்திரமளிக்கும் வேலை பெரிய வேலை இல்லையா? பிரான்ஸிலே பிரமாதமான காரியங்களை நேசப் படைகள் சாதித்து வருகின்றன. அங்கு ஒரு பெரிய ஜெர்மன் படையை நேசப் படைகள் இடுக்கியில் வைத்து நசுக்குவது போல் நசுக்க முயலுகின்றன. இரு புரம் நேசப் படைகளிருக்க இடையே 10 மைல்கள் தானிருக்கின்றன. இந்த வழியாக நாஸிப் படைகள், தப்பியோடிக் கொண்டிருக்கின்றன. நேச விமானிகளுக்கு நல்ல வேட்டைதான். நாஸிகளுக்கு அது காரணமாக ஏக நஷ்டம் தானே!

இதென்ன பிரமாதம்?

'இது என்னய்யா பிரமாதம், இதோ பாருங்கள் இன்னும் பெரிய விஷயத்தை!' என்று சொல்லுகிறவர்கள் போல, பிரமாண்டமான நேசப் படை ஒன்று தென் பிரான்ஸிலே, மார்சேல்ஸிற்கும், நைஸிற்கும் இடையே போய் இறங்கி விட்டன. வானத்தில் எதிர்ப்பே இல்லையாம். ராஜா மாதிரி விமானங்களிலிருந்து நேசத் துருப்புகள் கடற் கரையிலிருந்து இரண்டு மைல் தூரத்திற் கப்பால் குதித்திருக்கின்றனர்.

ஏமாந்தார்கள்!

பாவம்! ஏதோ கடல் வழியாக மட்டும் நேசப் படைகள் வரும் என்றெண்ணி, மகா வலுவுள்ள கோட்டைகளைக் கடற்கரையோரத்தில் எழுப்பி, பூத பீரங்கிகளை அவற்றில் பொருத்தி, சமுத்திரத்தை நோக்கி மீட்டி வைத்திருந்தார்கள் ஜெர்மானியர். ஆனால், விமான ஆதிக்கம் ஏற்பட்ட பிறகு யாராவது கடல் மூலம் முதல் போரைத் தொடங்குவார்களா? ஆரம்பத்தில், விமானங்கள் தொடர்ந்து குண்டுகளைப் பொழிந்து, பின்னால் தனது கட்சியினர் போய் இறங்க விருக்கும் பிரதேசங்களை 'பொட்டி'யாக்குகிறார்கள். அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு பங்கம் விளைவிக்கிறார்கள். யுத்தக்கப்பல்களிலிருந்தும் பீரங்கிப் பிரயோகம் செய்கிறார்கள். இதற்கப்புறம் விமான மூலம், படைகள், கடலிலிருந்து சிறிது தூரத்திற்கப்பால் இறக்கப்படுகின்றன. அந்தப் படைகளில் ஒரு பகுதி, கடற்கரையோரத்தில் நாய்கள் போல் காத்துக் கிடக்கும் எதிரிகளை ஹதம் செய்யப் புறப்படுகின்றன. மற்றொரு பகுதி, வானத்திலிருந்து குதித்த மோட்டார்களில் ஏறி, முன்னேற முயலுகின்றன. சீக்கிரமாகவே கடற்கரை காலியாகிறது. படை யெடுப்பவர்களது படைகள், அதற்கப்பால் சௌகரியமாக வந்து இறங்குகின்றன. படையெடுப்பு வேகம் அதிகரிக்கிறது.

இந்த தினுஸிலே தான் நார்மண்டியிலும் படையெடுப்பு நடந்தது. இப்பொழுது மத்யதரைக் கடலை யடுத்த மார்சேல்ஸ் பிரதேசத்திலும் நடக்கின்றது.

எதிர் பார்த்தார்களா?

பிரதம மந்திரி சர்ச்சில் இத்தாலிக்கு விஜயம் செய்ததும், அங்கு அமெரிக்கப் படைத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியது ஆகியவற்றின் மர்மம் இப்பொழுது நன்றாக வெளியாகி விட்டதே! ஜெர்மானியர் இந்தப் படையெடுப்பை எதிர் பார்த்திருக்கிறார்கள் என்று நிச்சயமாக சொல்ல முடியாது. ஆனால், விஷியிலிருந்து மார்ஷல் பிடெய்ன் தமது கோஷ்டியோடு வெளியேறி யிருக்கிறார். மார்சேல்ஸில் உள்ள சாதாரண ஜனங்களை யெல்லாம், உடனே அங்கிருந்து வெளியேறும்படி ஜெர்மன் தலைவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, கடைசி சமயத்தில் இந்த ஆபத்தை அவர்கள் அறிந்திருக்கக் கூடும் என்றும் நினைக்க இடமிருக்கிறது.

இரண்டுக்குப் பயந்தார்; ஆனால்?

இரண்டு போர் முனைகளில் போராடுவதற்கு ஹிட்லர் ஏகமாகப் பயந்துக் கொண்டிருந்தார். ஆனால், இன்று அவர் ஐந்து முனைகளில் போராட வேண்டிய நிலைமையில் கொண்டு வைக்கப்பட்டிருக்கிறார். கிழக்குத் திசையிலோ ருஷ்யர்கள், 'எங்களைப் போல் யாரால் இவ்வளவு வேகமாக முன்னே ஓட முடியும்?' என்று உலகோரைக் கேட்பவர்கள் போல, தங்கு தடையின்றி வந்து கொண்டிருக்கிறார்கள். கிழக்குப் பிரஷ்யாவிற்கு ஒரு பாதுகாப்பாக, அதன் எல்லையிலிருந்து 17 மைல் தூரத்திலிருந்த ஒரு நதியை ருஷ்யர்கள் கடந்து விட்டனர். 'குடி முழுகப் போகிறதே!' என்று நினைத்துத் துடிப்பவர் போல ஹிட்லர் அங்கு புதுப் படைகளை அனுப்பவேண்டியிருக்கிறது. போலந்திலே வார்ஸா அருகே போர் நடக்கிறது. இன்னும் தெற்கிலே ஸிகோஸ்லோவாகிய நாட்டருகே ருஷ்யர்கள் வந்து விட்டார்கள். இது ஒரு பயங்கரப் போர் முனை ஆயிற்று? வட மேற்கு பிரான்ஸிலே, நார்மண்டியிலே ஒரு முனை, முட்டித் தள்ளிக் கொண்டு பாரிஸை நோக்கி வருகிறது. இத்தாலியிலே ஒரு போர் முனை ஹிட்லருக்கு இழவுச் செய்திகளை அனுப்பிய வண்ணமே இருக்கிறது. நான்காவது போர் முனை நான்கு தினங்களுக்கு முன் தென் பிரான்ஸில் ஆரம்பமாகி யிருக்கிறது.

என்ன பலன்?

இப்பொழுது தோன்றியுள்ள தென் பிரஞ்சுப் போர்முனையினால் என்ன பலன் ஏற்படுமென்று கேட்பீர்களே! நார்மண்டியிலே ஒரு சிறு இடுக்கித் தாக்குதல் நடக்கிறது. அதில் ஒரு ஜெர்மன் படை சிக்கிக் கொண்டிருக்கிறது. அந்த நார்மண்டிப் போரரங்கத்தில் உள்ள படைகளை, இந்த தென் பிரான்சில் இறங்கிய படைகள் போய் சந்திக்க முயலும். அதாவது வடமேற்கு பிரான்ஸிலிருந்து தென் பிரான்ஸ் வரை ஒரு குறுக்குக் கோடு போட்டதுபோலாகிவிடும். இந்த இரு பிரதேசங்களில் உள்ள படைகளும் சந்தித்துவிட்டால் அப்புறம் அந்தக் கோட்டிற்கும், ஸ்பானிய நாட்டு எல்லைக்கும், அட்லாண்டிக் மகாசமுத்திரத்தை ஒட்டிய கடற்கரைக்கும் உள்ளடங்கிய பிரதேசத்தில் இருக்கும் நாஸிப் படைகளுக்கும், மூல நாஸிப்படைக்கும் தொடர்பற்றுப் போகும். அதற்கப்புறம் அந்தப் படைகள், பொறியில் சிக்கிய எலிகள் மாதிரிதான்.

இத்தாலியிலே ஹெட் ஆபீஸ்

தென் பிரான்ஸிலே நேசப் படைகள் சென்று இறங்கு முன்பு, வட ஆபிரிக்காவில் உள்ள மத்யதரைக் கடல் பிரதேச ராணுவத் தலைமைக் காரியாலயம் இத்தாலிக்கு மாற்றப்பட்டது ஒரு விசேஷ சம்பவமாகும். இத்தாலியிலும் நாஸிகள் வாழ்வு இன்னும் சிறிது காலம் என்பதை இந்த இடமாற்றம் வெளிக் காட்டுகிறது. கூடிய சீக்கிரமே பிரான்ஸில் உள்ள தலைமைக் காரியாலயமும், இத்தாலிக்கு மாறியுள்ள தலைமைக் காரியாலயமும் ஒரே இடத்தில் வந்து சேரலாம் என்று கூடத் தோன்றுகிறது.

விமானமில்லையா?

ஏனய்யா, ஜெர்மனியிடம் இந்தப் படையெடுப்புகளைத் தடுக்கவோ, தனது எதிரிகளுக்குச் சேதம் விளைவிக்கவோ விமானங்கள் இல்லையா என்று கேட்கலாம். முன்பிருந்ததுபோல் இப்பொழுது அத்தனை விமானங்களில்லை தான். வீர ருஷ்யர்கள் தான் ஜெர்மனியின் தோலை உரித்து விட்டார்களே! ஜெர்மனியிடம் இப்பொழுது போதுமான விமானங்கள் இருக்கும் ஆனாலும், தேவையான, திறமை மிக்க விமானிகள் இல்லை. எல்லோரையும் தான் அநியாயமாக எமனுலகிற்குப் போகச் செய்துவிட்டாரே புண்ணியவான் ஹிட்லர்! அதோடு, அசல் ஜெர்மனிக்குக் கூடிய சீக்கிரமே ஆபத்து வரத்தான் போகிறது. அதைச் சமாளிக்கப் போதுமான விமானங்கள் வேண்டாமா? அதற்காகவே, ஜெர்மனியிலேயே அந்த விமானங்களைச் சேகரித்து வைத்திருக்கக் கூடும் அவர். அப்படியானால், வெளி நாடுகளைத் தனதாகவே வைத்துக்கொண்டிருப்பதில் அவருக்கு சிரத்தை இல்லையா! என்று ஒரு கேள்வி எழலாம்.

ஆசையும், அதிருஷ்டமும்

அவருக்கு ஆசை தான்! ஆனாலும் என்ன செய்வது? 'ஆசையிருக்கிறது தாசில் பண்ண, அதிருஷ்டம் இருக்கிறது கழுதை மேய்க்க!!' என்கிற பழமொழிக்கேற்றப் போலிருக்கிறதே அவரது தலைவிதி. பெரிசாகத் தான் கோட்டை கட்டினார். அது வெறும் மனக்கோட்டையாகி விட்டதே! அதிலும் இடிமேலிடி விழுந்து விட்டதே! இனி அவர் தலை தூக்கமுடியாது. சர்ச்சில் சொல்கிறபடி நடப்பதாக இருந்தால் சரி, சென்ற வாரத்தில் நடந்த விசேஷ சம்பவங்களை எல்லாம் சேர்த்துப் பார்த்தாலும் சரி இவ்வருஷமே ஜெர்மனி போர் முடிவுக்கு வரவேண்டியது தான்.

ஜப்பானில் பங்கீடு முறை

கோழிக் குஞ்சின் தீனியை மக்கள் உண்ணுகின்றனர்

(மிஸ்டர் சைசாக்கு ஷியோனி எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் மொழிபெயர்ப்பு)

[இந்தக் கட்டுரையாளர் ஜப்பானிய ஸ்தானீகர் காரியாலத்தில் உத்தியோகத்திலிருந்தவர். 1938-ம் வருஷம் முதல் சீனாவில் வசித்து வந்தார். அப்போது, ஜப்பானியர்களுக்கு விரோதமான புரட்சி வேலைகளில் ஈடுபட்டு வந்தார். இவருக்கு வயது 30. நாஷனல் ஒசாக்கா பிற மொழிப் பள்ளிக் கூடத்தில் பிரஞ்சு மொழிப் பட்டம் பெற்றார். இந்தோ-சீனாவிலுள்ள ஹோனாய் நகரிலுள்ள ஜப்பானிய ஸ்தானீகர் ஜெனரலுடைய காரியாலயத்திற்கு 1936-ம் வருஷம் ஒரு ஸ்தானீகராக அனுப்பப் பட்டார். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, ஒரு நாள் அவர் ஏறிச் சென்ற மோட்டார் கார் தவறுதலால் சீன எல்லையைக் கடந்து விட்டது. எனவே உடனே கைது செய்யப்பட்டார். சீனர்கள் தன்னை நடத்தும் கண்ணியத்தைக் கண்டு பெரிதும் ஆச்சரியப்பட்டுப் போனார். பிடிபட்ட 3 மாதங்களுக்குள்ளாகவே, தான் பாஸிஸ்ட் எதிர்ப்பு வேலைகள் செய்வதாகத் தானே முன் வந்தார்.]

நான் சென்ற 5 வருஷங்களாகச் சீனுவில் வசித்துக் கொண்டு வருகிறேன். என்றாலும், ஜப்பானிலுள்ள நிலைமையைக் குறித்து அவ்வப்போது நான் தெரிந்து கொண்டு வருகிறேன். இந்தத் தகவல்களை யறிய பல ரகசிய வழிகள் இருக்கின்றன. அன்றியும் சீன அரசாங்க வேவுகாரர்களும் அவ்வப்போது உதவிக் கொண்டிருக்கிறார்கள். யுத்த நெருக்கடியில் பங்கீட்டு முறையால் தான் ஜப்பானிய மக்கள் காலங் கடத்திக் கொண்டு வருகிறார்கள். ஜப்பானில் கட்டுப்பாட்டு முறை எப்படி வேலை செய்கிற தென்றால், ஜப்பானில் உயிர் கூடப் பங்கீட்டிற்குள்ளாகி யிருக்கிறது என்று மக்கள் இரகசியமாகப் பேசிக் கொள்ளத் தக்கபடி அவ்வளவு கண்டிப்பாயிருக்கிறது. பண்டங்களின் விலை வாசிகள் வெளி நாடுகளில் கூறப்படுவது போல அவ்வளவு நெருக்கடியானதா யில்லை. ஏனென்றால் நெடு நாட்களுக்கு முன்னேயே விலைக் கட்டுப்பாட்டு முறையை ஜப்பானிய அரசாங்கம் மேற் கொண்டு விட்டது. ஆனால் சம்பளம் வாங்கி உயிர் வாழ்கிறவர்கள் பாடு தான் கஷ்டம். ஏனென்றால், விலைவாசிகள் உயர்ந்த அளவிற்குத் தக்கபடி, சம்பளம் உயர வில்லை.

பங்கிடு ஆரம்பம்

இன்று ஜப்பானியப் பொருளதார நிலை பெரிதும் சீர் குலைந் திருப்பதற்குக் காரணம் என்ன வென்றால், அங்கே மூலப் பொருட்களும் பண்டங்களும் கிடைப்பதில்லை. நிற்க, யுத்த வேலைகள் தான் செய்யப்பட வேண்டும்; பிறகு முக்கிய மற்ற வேலைகள் செய்வது நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்தார் உத்தி விட்டிருக்கின்றனர். இது, நிலைமையை மேலும் மோசமாக்கி விட்டது. பண்டங்கள் குறைவா யிருக்கும் நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு ஜப்பானிய அரசாங்கம் கைக் கொண்ட முறைதான் பங்கீட்டு முறை. இந்த முறை முதன் முதலாக 1938-ம் வருஷம் மே மாதம் கையாளப் பட்டது. அப்போது உலோக எண்ணெய் வகைகள் பங்கீடுச் சீட்டுகளைக் கொண்டு தான் வாங்க வேண்டி யிருந்தது. முதன் முதல் பங்கீட்டிற் குட்பட்டவை சர்க்கரையும் தீப் பெட்டியுந் தான். இவை 1940-ம் வருஷம் ஜூன் மாதம் முதன் முதலாகப் பங்கிடப்பட்டன. அது முதல் பங்கிடப் பட்டுள்ள பொருட்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வருகிறது. அதன் பயனாக ஜப்பானிய மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருட்கள் அனைத்தும் இப்போது பங்கீடுத் திட்டத்திற்குட்பட்டு விட்டன.

அயலார் சங்கங்கள்

ஜப்பானில் "அயலார் சங்கங்கள்" என்று அநேக சங்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சங்கத்திலும் 10 குடும்பத்தினர் மட்டுந் தான் அனுமதிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒவ்வொரு தலைவருண்டு. அவரைப் போலீசார்கள் நியமிக்கிறார்கள். பங்கீடுச் சீட்டில் குறிப்பிட்டுள்ள அளவிற்கு ரொக்கத்திற்கே பண்டங்கள் வாங்கப்படுகின்றன. திருட்டுத் தனமாகவும் விற்பனையாகின்றன. ஆனால் இந்தத் திருட்டு விற்பனை மிகவும் கொஞ்சமாகத் தான் நடைபெற முடியும். ஜப்பானியர்கள் சாதாரணமாக அரிசிச் சோறு தான் உண்ணுகிறவர்கள். மாதம் ஒன்றிற்கு, வயது வந்த ஒவ்வொருவருக்கும் 8 பவுண்ட் அரிசி தான் கிடைக்கிறது. இதனால் தான் ஜப்பானிலும், ஜப்பானியர் வசப்பட்ட சீனாவிலும் ஏராளமான உணவு உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கூச்சல் கிளம்புகிறது. சாதாரணமாக, வயது வந்த ஒவ்வொருக்கும் ஒரு மாதத்தில் 22 பவுண்ட் அரிசி தேவைப்படும். கஷ்டப்பாடு பட்டு வேலை செய்கிறவர்களுக்கு இன்னும் அதிகமாகத் தேவைப்படும். ஆனால் கொடுக்கப்படும் அரிசியோ கொஞ்சமும் போதாது. இந்தக் குறையை நேர் செய்து கொள்ளும் பொருட்டுத் தான் உருளைக் கிழங்கும், பருப்பு வகைகளும் சாதாரணமாக உபயோகிக்கிறார்கள். அரிசிச் சாப்பிடுகிறவர்களின் உபயோகத்திற்கென்று உருளைக்கிழங்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று ஜப்பானிய அரசாங்கத்தார் விடுத்திருக்கும் கட்டளையும் இந்தக் காரணம் பற்றித் தான். தம் வீடுகளை விட்டு வெளியே உணவருந்த வேண்டியவர்களுக்கு உணவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த உணவுச் சீட்டுகள் உடையவர்கள் மட்டுந் தான் உணவுச் சாலைகளில் சாப்பிடலாம். ஜப்பானியர்கள் தம் நண்பர்களையோ உறவினர்களையோ காணப் போனால், தம்முடன் தமக்கு வேண்டிய அரிசியையும் எடுத்துக் கொண்டு போவது வழக்கமாகி விட்டது. விவசாயிகளுக்குங் கூட, போதுமான அரிசி கிடைப்ப தில்லை. ஏனென்றால் சாகுபடி முழுவதையும் அரசாங்கத்தார் தம் மனம் போல ஒரு விலை வைத்து எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

உணவுப் பொருள் கஷ்டம்

சாதாரணமாகக் கொரியாவில் சாகுபடியாவதை விட 1942-ம் வருஷம் 1 கோடி பிக்கூல் (6,000 டன்) அரிசி குறைவாகச் சாகுபடியானது. அன்றியும், தென் கிழக்காசியாவில் ஜப்பானியர் வசப்பட்ட நாடுகளில் விளையும் அரிசியை ஜப்பானுக்குக் கொண்டு வந்து சேர்க்க போதுமான கப்பல்கள் கிடையாது. ஆகவே உணவுப் பொருட் கஷ்டம் அங்கே மிகவும் கடுமையாயிருக்கிறது.

சுவை யூட்டத் தக்க சர்க்கரை, உப்பு, குழம்பு முதலியவையும் பங்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் மாத மொன்றிற்கு சர்க்கரை, தயிர், பிஸ்கோத்து, ஆகியவை ½ பவுண்ட் விகிதமும் 1 பயின்ட் சாராயமும் தான் கொடுக்கப் படுகின்றன. இவற்றின் உற்பத்தி குறையுமானால், இந்தப் பங்கீட்டின் அளவும் குறையக் கூடும்.

10 பேருக்கு அதிகமுள்ள குடும்பங்களுக்கு, 230 தீக்குச்சிகளுள்ள 1 பெட்டிகளும், 6 பேருக்கு அதிகமுள்ள குடும்பங்களுக்கு 6 பெட்டிகளும் மாதந் தோறும் அனுமதிக்கப்படுகின்றன. 5 பேர்களுள்ள குடும்பத்தாருக்கு, 70 தீக்குச்சிகள் கொண்ட 10 பெட்டிகளும் 4 பேருக்குக் குறைவாயுள்ள குடும்பத்தாருக்கு 2 பெட்டிகளும் மட்டுந் தான் அனுமதிக்கப் படுகின்றன. ஆகவே, ஒவ்வொருவருக்கும் மாத மொன்றிற்கு 1 பெட்டி வீதம் தான் கிடைக்கும். இது சுருட்டுப் பிடிப்பதற்கே போதாது. ஒரு மாதத்திற்கு, உடம்பு தேய்த்துக் கொள்ள ஒரு துண்டு சோப்பும், துணிகளுக்குப் போட ஒரு துண்டு சோப்புந் தான் அனுமதிக்கப்படுகிறது. ஒரு மாதத்திற்கு ஒரு குடும்பத்திற்கு இவை கொஞ்சமும் போதாது.

கிடைக்கிற போது மட்டும் பங்கிட்டுக் கொடுக்கப்படும் பண்டங்களு மிருக்கின்றன. பீயர், சோடா, காயிதம், முட்டை ஆகியவை இவ்வினத்தைச் சேர்ந்தவை. இவை ஒரு முறை விநியோகிக்கப்பட்ட பிறகு, இரண்டாம் முறை விநியோகிக்கத் தக்க அளவு சேகரிப்பதற்கு 2 மாதங்கள் பிடிக்கின்றது. முட்டைப் பஞ்சத்தை ஈடு செய்து கொள்ள வேண்டி, கோழிக் குஞ்சுகளை வளர்க்க முடியவில்லை. ஏனென்றால், அவற்றிற்கு உணவு கிடைப்பதில்லை. முன்பு

(11-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

குறித்த சில புள்ளி விவரங்களை மிஸ்டர் ரூஸ்வெல்ட் கூறினார். அவை மிகவும் மிதமானவையாகத் தானிருக்க வேண்டும். அதாவது 100 விமானந் தாங்கிக் கப்பல்கள் முதலியன இருப்பதாகக் கூறினார். ஆகவே, அடுத்த சில மாதங்களில் ஜப்பானியத் தீவுகளில் யாரும் இருக்க மாட்டார்கள் தான்!

ரூஸ்வெல்ட் பிரசங்கத்தின் உயர்வு

பசிபிக் போர் முனையில் பல இடங்களுக்கும் போய்விட்டுத் திரும்பிய மிஸ்டர் ரூஸ்வெல்ட், வாஷிங்டன் நகரத்தைச் சேர்ந்த ப்ரெமெர்டர் துறைமுகத்தின் தளத்திலிருந்து கொண்டு ஒரு பிரசங்கம் செய்தார். அநேகத் தீவுக் கூட்டங்களும், குடால்கனல், நியூகினி, மார்ஷல்ஸ், மாரியாண்ஸ் முதலிய தீவுகளும் எப்படிக் கைப்பற்றப் பட்டனவென்று விளக்கிக் கூறினார். மேலும் அவர் கூறியதாவது:—

"எதிர் காலத்தில் சீனாவில் போராடுவதற்கு இந்தத் தீவுக் கூட்டங்கள் உதவும். பிலிப்பைன் தீவுகளை மீண்டும் பிடித்து சுயேச்சை நாடாக்க, உதவும். ஜப்பான் தீவுகளிலேயே போராடுவதற்கு இது உதவும். அதன் தலை நகரமான டோகியோவிலுங் கூட போராடுவதற்கு, இது உதவக் கூடும்."

இதைக் கேட்கும் காய்சோ கூட்டத்தாரின் மனதிற்கு இது மிகவும் கஷ்டமாகத் தான் இருக்கும். மேலும் அவர் கூறியதாவது:—

"ஜப்பானியர் வார்த்தைகளையோ கண்ணியத்தையோ நம்ப முடியாது. இது மிகவும் சாதாரணமான தோர் மொழிதான். ஜப்பானியர் அட்டகாசம் அடங்கிய பிறகு, பசிபிக் பகுதி முழுவதிலும் நிரந்தரமான சமாதானம் நிலவக் கூடும் என்பதற்கான அறிகுறிகள் சிறந்து காணப்படுகின்றன. பசிபிக் பகுதியிலுள்ள கோடிக் கணக்கான மக்கள் சமாதானப் பிரியர்கள். பிற நாட்டவர்கள் ஜப்பானைக் கண்டிக்காமலிருப்பது துரதிர்ஷ்டமான தோர் நிலைமை தான். ஜப்பானியர்களை நாம் நம்புவதற்கு இன்னும் பல வருஷங்கள் பிடிக்கும்.

நமக்கும் நமது கண்டத்திற்கும் எதிர் காலத்தில் பெருந் தொல்லைகள் கொடுக்கக் கூடிய ஜப்பானை அழிப்பதனால், அந்த அச்சத்திற்குட்பட்டிருந்த தூரக் கிழக்கு நாடுகளிலுள்ள மற்ற மக்கள் அச்சமின்றி வாழலாம்.

பர்மாவில் முன்னேற்றம்

பர்மாவில் நேசப் படைகள் எதிரிகளைத் தாக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஜப்பானியப் படைகளோ, தம் வசமுள்ள சப்ளைகள் தீர்ந்துவிடுமே என்ற அச்சத்தினால் பின்வாங்கியோடிக் கொண்டிருக்கின்றன. கடும் மழைகளால் இந்த இருவகைப் படையினருக்கும் மிகவும் கஷ்டந் தான். இப்படிப்பட்ட நிலைமையில் நடைபெறும் போராட்டம் ஒரு கப்பற் போராட்டமாகத் தோற்றுகிறதே யொழிய தரைப் போராட்டமாகத் தோற்றுவதில்லை. மிட்கினா ரயில்வேயை நாம் கைப்பற்றி விட்டோ மென்பது உண்மையிலே ஒரு நல்ல செய்தி தான். கடும் மழையாக விருந்த போதிலும், இந்த ரயில்வே வழியாக மாண்டலேக்கு நாம் சப்ளைகள் அனுப்பக்கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டது. போர் முனைகளுக்கு வாழ்க்கைப் பொருட்களையும் யுத்தத் தளவாடங்களையும் ஆறுகள் வழியாகவும் கொண்டு போய்ச் சேர்க்கிறார்கள். இப்போது இந்தியாவை விட்டு ஜப்பானியர் அடியோடு ஒழிந்து போய் விட்டார்கள்.

இப்படிப்பட்ட தோர் நிலைமையை யுண்டாக்கிய பல நாடுகளின் படைகளுக்கும் இந்தியா பெரிதும் கடமைப் பட்டிருக்கிறது. குறிப்பாகச் சென்னைப் படையினருக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. இனி "இராணுவ வகுப்பினர்" என்னும் விசேஷப் பெயர் எந்த இனத்தவருக்கும் கிடையாது. இனி அவர்கள் போராட்டக் காரர்கள் என்று தான் அழைக்கப்படுவார்கள். அவர்கள் உலகின் பல பகுதிகளிலிருந்தும் வந்து சேர்ந்தவர்கள். காடுகளில் நேருங் கஷ்டங்களை யெல்லாம் சகிக்கக் கூடியவர்கள்; தலை சிறந்த வீரர்கள். இப்போது வட பர்மாவில் மக்கள் சர்வ சாதாரணமாக சுயேச்சையோடு வாழுகிறார்கள். இனி அடுத்த கட்டம் தெற்கே தான். அங்கே ஜப்பானியர்கள் தம் படைகளைத் திரட்டிக்கொண்டு போர் தொடுப்பார்கள். அதன் முடிவு என்னத மென்று அனைவருக்கும் நிச்சயமாகத் தெரியும். யாருடைய கை ஓங்கியிருக்கிறது; யாருடைய தளவாடங்கள் அதிகமாயிருக்கின்றன; யாருடைய மனோபலம் உறுதியா யிருக்கிறது என்று எதிரிகளுக்கு நன்றாகத் தெரியும். சமீபத்தில் போர் முனைக்கு விஜயம் செய்திருந்த மேன்மை தங்கிய வைசிராய் பிரபுவும் இதே விஷயத்தைத் தான் வற்புறுத்தியிருக்கிறார். படாடோபமான மனோபலம் குன்றத் தலைப்படுவது தோல்வியின் ஆரம்பச் சின்னமாகும். இதே நிலையில்

இந்த வார உலக



யுத்தச் செய்திகள்



தான் ஐரோப்பாவில் நாஜிகள் இப்போதிருக்கிருர்கள்.

ரஷ்யாவின் மகா போர்த் தந்திரம்

ரஷ்யர்கள் தம் போர்த் திட்டங்களை வெகு இரகசியமாக வைத்துக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே, பால்டிக் பிரதேசத்திலுள்ள பல குடியரசு நாடுகளிலுமிருக்கும் ஜப்பானியப் படையினர் செய்வதினனதென்று தெரியாது திகைக்கிருர்கள். கடைசியில் ரஷ்யர்கள் வசம் சிக்கிக் கொள்ளுகிருர்கள். ஆகவே அடுக்கடுக்காகப் பல பெரும் வெற்றிகள் ரஷ்யர்களுக்குக் கிடைக்கின்றன. முதலில் வார்சாவுக்கு வடபுரமும் தென்புரமும் பாய்ந்து சென்று அதைக் கடந்தார்கள். லட்வியா வழியாக ரீகாவுக்குப் போய் பால்டிக் கடலை யடைந்தார்கள். எஸ்டோனியா வழியாகவும் கடலைப் போய் அடைந்தார்கள். அதே சமயத்தில் பெரும் படைகள் கிழக்குப் பிரஷ்யாவைத் தாக்கின. ரஷ்யர்கள் ஜெர்மானியர்களுக்குக் கொஞ்சமும் ஓய்வு தருவதில்லை; தம் படைகளை திரட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பந் தருவதில்லை. மகா கெட்டிக்காரத்தனமாகவும் அறிவுத் துறையை யொட்டியும் அநேக விடங்களில் அவர்கள் போர் தொடுப்பதை நாம் காண்கிருேம்.

போலந்து தலைவருக்கும் மார்ஷல் ஸ்டாலினுக்கும் நடந்த பேச்சுக்கள் எப்படிப்பட்டவை என்று அறிவிக்கப்படவில்லை. கிழக்குப் பிரஷ்யாவைப்பற்றி அவர்கள் பேசி யிருக்கக் கூடும். போலந்துக்கும் கிழக்குப் பிரஷ்யாவுக்குந் தான் தொடர்பு அதிகமே யொழிய, ஜெர்மனிக்கல்ல. ஆனல், முதன் முதலாக ஜெர்மன் பிரபுக்களும் முரட்டு ஜமீன்தார்களும் தம் அரசியல் வசதியையும், போர் வசதியையும் முன்னிட்டுக் கைவசப்படுத்தி கொண்டார்கள். பொருளாதாரத் துறையில் கிழக்குப் பிரஷ்யா ஜெர்மனியின் உதவியை நாடவேண்டி யிருந்தது. அங்கே ஜனத் தொகை மிகவும் கொஞ்சம். இங்கே ஜெர்மானியர்கள் வந்து குடியேற விரும்ப வில்லை. அறுவடை காலங்களி லெல்லாம் வேலைக்கு ஆளில்லாமல் அங்கே திண்டாடுவது வழக்கம். ஆனல் அடுத்துள்ள போலந்திலிருந்து ஒவ்வொரு முறையும் 25,000 பேர்கள் இங்கு வந்து கொண்டிருந்தனர். ஆகவே, கிழக்கு ப்ரஷ்யா பற்றி போலந்துக்குத் தான் நியாயமான உரிமையுண்டு.

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

கோழிக் குஞ்சுகளுக்கு உணவாயிருந்தவை, இப்போது மனிதர் உணவாயிருக்கின்றன. நாட்டின் இறைச்சித் தேவையை முன்னிட்டு முயல்கள் வளர்க்கப்படுகின்றன.

ஜப்பானியர்களுக்கு இரண்டாவது முக்கியமான உணவு மீன். இதுவும் இந்த யுத்த காலத்தில் மிகவும் குறைவாகவே கொடுக்கப்படுகிறது. மீன் பிடிக்கும் கப்பல்கள் பலவற்றை அரசாங்கத்தார் மேற்கொண்டு ரோந்து போவதற்கு உபயோகிக்கிருர்கள். அன்றியும் கரையாளர்களில் இளைஞர்களைப் படையில் சேர்த்துக் கொண்டதனுல், மீன் பிடிப்பதற்கு ஆட்கள் கிடைப்பது அரிதாகி விட்டது.

காய் கறி தோட்டங்களில் பெரும் பகுதி நெல் வயல்களாக மாறி விட்ட படியால், காய்கறி உற்பத்தியும் வெகுவாகக் குறைந்து விட்டது. பூந் தோட்டங்களில் பூஞ் செடிகளுக்குப் பதிலாகக் காய்கறிகளைப் பயிர் செய்யும்படி கட்டளையிட்டிருக்கிருர்கள். பெண்கள் காலையில் 3-மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பி சந்தைக்குப் போய், தமக்கு வேண்டியவற்றை வாங்க வரிசைக் கிரமமாக நின்று கொண்டிருக்க வேண்டும்.

1 42-ம் வருஷம் பிப்ரவரி மாதம் துணிப் பங்கீடு அமுலுக்கு வந்தது. எல்லா வகைத் துணிகளும் பங்கீட்டிற்குட்பட்டவை தான். பெரிய நகரங்களில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் 100 கூப்பன்கள் கொடுக்கப்படுகின்றன. கிராமங்களில் வசிப்பவர்களுக்கு 80 கூப்பன்கள் மட்டுந் தான் கொடுக்கப்படுகின்றன. ஆனல், 1943-ம் வருஷம் ஒவ்வொரு துணிக்கும் முன்பு கொடுத்ததை விட கால் பங்கு அதிகம் கூப்பன் கொடுக்க வேண்டி யிருந்தது. ஆகவே, ஒரு சூட்டுக்கு 63 கூப்பனும், ஒரு ஓவர் கோட்டுக்கு 50 கூப்பனும், சாதாரண மக்கள் அணிந்து கொள்ளும் 'யூனிபார்மு'க்கு 40 கூப்பனும், ஒரு மழை கோட்டுக்கு 38 கூப்பனும், பெண்கள் உடைகளுக்கு 35 கூப்பனும், ஒரு ஷர்ட்டுக்கு 15 கூப்பனும், வேனிற் காலத்தில் அணிந்து கொள்ளும் உள் உடைக்கு 16 கூப்பனும், ஒரு ஜதை மேல் ஜோடுக்கு 3 கூப்பனும், ஒரு துண்டுக்கு 3 கூப்பனும், ஒரு கைக் குட்டைக்கு 2 கூப்பனும் கொடுக்க வேண்டியிருந்தது. இந்தத் துணிகள் பெரும்பாலும் செயற்

(12-ம் பக்கம் பார்க்க)

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

ஆகஸ்ட்டு 10.—பறக்கும் வெடிகுண்டுகள் கிளம்பும் வட பிரான்சிலுள்ள தளங்கள்மீது பிரிட்டிஷ் விமானப் படை வெடி குண்டுகளை வீசியது.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்

ஆகஸ்ட்டு 13.— நான்கு வல்லரசுகளின் உலகப் பாதுகாப்பு மகாநாடு வாஷிங்டனில் ஆகஸ்ட்டு மாதம் 21-ம் தேதி நடைபெறும். பிரிட்டிஷ் பிரதிநிதிகள் நேற்று வாஷிங்டன் வந்து சேர்ந்தார்கள்.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஆகஸ்ட்டு 10.—சபமா, டாங்கினி ஆகிய இடங்களை நேசப்படைகள் கைப்பற்றின.

சமீபத்தில், மணிபூர், இம்பால், கொஹிமா முதலிய மீட்கப்பட்ட இடங்களில், வேவல் பிரபு 3 நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார்.

ஆகஸ்ட்டு 12.—இம்பாலுக்கு 60 மைல் தூரத்திலுள்ள ஷின்மலை மீதுள்ள டெங்காம் என்னும் ஊருக்குள் 14-ம் படை புகுந்தது.

ஆகஸ்ட்டு 13 —மிட்சினா-பாமோ ரோடிலுள்ள காசு என்னுமிடத்திற்குள் நேசப் படைகள் புகுந்தன.

ஆகஸ்ட்டு 14.—14-ம் படை பர்மா எல்லைபுரத்தை யடைந்து விட்டது.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

ஆகஸ்ட்டு 9.—பின்லாந்தின் மாஜி அந்நிய நாட்டு மந்திரியாயிருந்த பி. ஹெகசெல், முதன் மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

ஆகஸ்ட்டு 10.—சோவியத் படைகள் ரீகாவை அடுத்து விட்டன. ஜாகோபில்ஸ், ரசினியல்ஸ், பாட்பிஸி, முதலிய 300 இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின. போலந்து முதன் மந்திரி நேற்று ஸ்டாலினைக் கண்டு பேசினர்.

ஆகஸ்ட்டு 11.—பெட்சோ, ரோஷி, க்ரிஷி, கோசெரவ்ருஸ்கி முதலிய 500 இடங்களை செம்படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 12.—லெபஸ்ஸாரி, ஆஸே, ஷெபடோவோ முதலிய 600 இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 13.—வைரு, மடோனு ஆகிய இரண்டு இடங்களையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 14.—ஒசோவீக் அன்டோஸ்லு முதலிய 100 இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

இத்தாலி, ஆப்பிரிக்கா மத்திய தரைக் கடற் பகுதி

ஆகஸ்ட்டு 9.—ரில் லோவை நேசப் படைகள் கைப்பற்றின. ஜெனரல் மெய்ட்லண்ட் வில்சன் தன் மத்யதரைக் கடற் பகுதிக் காரியாலயத்தை ஆல்ஜியர்ஸிலிருந்து இத்தாலிக்கு மாற்றிக் கொண்டார்.

ஆகஸ்ட்டு 11.—கபிஸ்ஸானே, மான்டரேடோ, கொரினல்டோ ஆகிய இடங்களை நேசப்படைகள் கைப்பற்றின.

சர்ச்சில் இத்தாலியிலிருப்பதாகத் தெரிகிறது.

ஆகஸ்ட்டு 12.—அமெரிக்க யுத்த உதவி மந்திரியும், அமெரிக்க சப்ளை படத்தலைவரும் இத்தாலியில் சர்ச்சிலைக் கண்டார்கள்.

ஆகஸ்ட்டு 13.—மிஸ்டர் சர்ச்சில், மார்ஷல் டிட்டோ, முதலிய நேசநாட்டுத் தலைவர்கள் ரோமாபுரியில் சந்தித்தார்கள்.

ஆகஸ்ட்டு 14.—ப்ரன்டோனை நேசப் படைகள் கைப்பற்றின.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வசப்பட்ட நாடுகள்.

ஆகஸ்ட்டு 9.—செண்ட் மாலோ லா மான்ஸ் முதலிய இடங்களை நேசப்படைகள் கைப்பற்றின.

ஜெனரல் அய்சினேவர் தன் தலைமைக் காரியாலயத்தை பிரிட்டனிலிருந்து பிரான்சுக்கு மாற்றிக் கொண்டார்.

சர்ச்சில் நார்மண்டிக்கு விஜயம் செய்தார்.

ஆகஸ்ட்டு 10.—அமெரிக்கப் படைகள் நான்டிசுக்குள் நுழைந்து விட்டன. நெய்னுக்குத் தெற்கேயுள்ள கான்டிவில்லா, பௌசிலா காம்பெய்ன், செண்ட் சில்வெய்ன், காவிகோர்ட் ஆகியவற்றை கனடியப் படைகள் கைப்பற்றின. பிரிட்டிஷ் படைகள் வைமாண்டைக் கைப்பற்றின. மார்டெய்னை மீண்டும் ஜெர்மன் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 11.—லா மான்ஸை மீண்டும் ஜெர்மன் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 13.—அமெரிக்கப் படைகள் சோர்டிவாலைக் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 14.—க்ளேர் டிசான், பின்னே ஆகிய ஊர்களுக்குள் நேசப் படைகள் நுழைந்து விட்டன.

மார்ஷல் பெடெய்ன், தன் சட்ட சமாதான மந்திரியுடனும், தொழில் மந்திரியுடனும், பிரசார மந்திரியுடனும் விஷியை விட்டுக் கிளம்பி விட்டார்.

ஆகஸ்ட்டு 15.—பிரான்சின் தென் பகுதியில் நைசுக்கும் மார்செய்ல்சுக்கும் இடையில், அமெரிக்க, பிரிட்டிஷ் பிரெஞ்சுப் படைகள் போய் இறங்கின. நேசப் படைகள் இடான்ஸியைக் கைப்பற்றி, செண்ட் டெனிஸ் டிமீர் வந்தடைந்தன. த்யூரி ஹார்கோர்ட், ப்ரெஸ்ஸி என்னுமிடங்கள் கைப்பற்றப்பட்டன. நார்மண்டியிலும் பிரிட்டனிலும் உள்ள படைகளுக்கு, அய்சினேவர் தானே தலைமை ஏற்றுக் கொண்டார். பிரான்சில் நடைபெறும் யுத்தத்தைக் குறித்து அவர் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

நடு நிலைமை நாடுகள்.

ஆகஸ்ட்டு 11 —விஷியில் ஸ்பானிஷ் ஸ்தானீகராயிருந்த செனர் ஜோஸ் பெலிக்ஸ் லெக் வரிக்கா ஸ்பெய்ன் அன்னிய நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஆகஸ்ட்டு 10.—க்யுஷா என்னும் ஜப்பான் தீவை அமெரிக்கக் கோட்டை விமானங்கள் தாக்கின. நாகசாக்கி துறைமுகம் தாக்கப்பட்டது. சுமாத்ராவிலுள்ள பலம்பாங் தாக்கப்பட்டது.

ஹூனானிலுள்ள ஹெங்கியானை ஜப்பானியர் கைப்பற்றினர்.

மிஸ்டர் ரூஸ்வெல்ட் ஹனெலுலுவில் 3 நாட்கள் தங்கியிருந்து, ஜெனரல் மெக்கார்தர், அட்மிரல்கள் நிமிட்ஸ், ஹால்ஸே, லீஹி ஆகியோருடன் கலந்து பேசினர்.

ஆகஸ்ட்டு 11.—வைஸ் அட்மிரல் ரிச்மண்ட் கெலி டர்னர் தன் காரியாலயத்தை பெர்ல் துறைமுகத்திலிருந்து செய்பானுக்கு மாற்றிக் கொண்டார்.

ஆகஸ்ட்டு 13.—20-வது விமானப் படைத் தலைவராக மேஜர் ஜெனரல் கர்டிஸ் லிமே நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆகஸ்ட்டு 14.—ஜப்பான் தாய் நாட்டை தாக்காமலேயே ஜப்பானியர்களைத் தோற்கடித்து விடலாமென்று அட்மிரல் நிமிட்ஸ் கூறினர்.

ஆகஸ்ட்டு 15.—காண்டன் ஹாங்கோ ரயில்வேயிலுள்ள லேயாங்குக்கு வடக்கே பல முக்கியமான இடங்களை சீனப் படைகள் கைப்பற்றின.

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

கைப் பஞ்சால் நூற்ற நூலைக் கொண்டு நெய்யப்பட்டவை. ஏனென்றால் நல்ல பருத்தித் துணிகளெல்லாம் யுத்த உபயோகத்திற் கென்று கொண்டு போகப் படுகின்றன. ஆகவே, இந்த துணிகள் 2, 3 சலவைகளுக்கு மேல் தாங்குவதில்லை. அன்றியும் மாட்டுத் தோலினால் செய்யப்பட்ட பாதரட்சைகளுக்குப் பதிலாக பன்றித் தோலினாலும் மீன் தோலினாலும் செய்யப்பட்ட பாதரட்சைகளை அணிந்து கொள்ளும்படித் தூண்டப் படுகிறார்கள். மழை நாடான ஜப்பானில் இவற்றை யுபயோகிப்பதனால், இவற்றின் உருவமே மாறிவிடுகிறது.

ஜப்பானில் உபயோகத்திற்கான பண்டங்கள் ஏறகெனவே பஞ்சமா யிருக்கின்றன. போதாக் குறைக்கு யுத்த நெருக்கடியாலும் நிலைமை மேலும் மோசமாகிக் கொண்டிருக்கிறது. சென்ற மழை காலத்தில் உணவுப் பொருள் பஞ்சம் ஏற்படக் கூடுமென்று அரசாங்கமே பொது மக்களை எச்சரித்தது. இன்றியமையாத பொருட்கள் அல்லாதவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளெல்லாம் யுத்தப் பொருட்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றன. ஆகவே, பொது மக்களுக்கு உபயோகமான பொருட்கள் கிடைப்பது அரிதாகி விடுகிறது. இனி நேசப் படைகள் பெருவாரியாக குண்டுகளை ஜப்பானிய கைத் தொழில் நகரங்கள் மீது வீசி, நாட்டின் உற்பத்தியையும் போக்குவரவு சாதனங்களையும் குலைப்பார்களானல், நிலைமை மேலும் மோசமாகி விடும்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.